DEPOSITION OF THE WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**Case no: CC.No. 05/2015**
**prosecution witness: Pw 7**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Accused absent, 317 petition filed.**

வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண்.C.No./20

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முத்து மணிகண்டன் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**05.05.2023**
முதல் விசாரணை:

1. நான் இராமேஸ்வரம் தீட்சதர் கொல்லையில் வசித்து வருகிறேன்.சிசிடிவி மற்றும் கம்பியுட்டர் சர்வீஸ் செய்து வருகிறேன். கடந்த 12.02.2015-ம் தேதி ஹோட்டல் எஸ் எஸ் கிராண்டில் உள்ள சிசிடிவி பார்க்கவேண்டும என்று போலீசார் அழைத்தார்கள்.அதன்பேரில் அன்று பகல் 1 மணியில் இருந்து 3 மணி வரை சிசிடிவி பூட்டேசை பார்த்தேன். அதில் 2 1/2 மணி நேரத்திற்கு முன்பாக வேகமாக ஓடிக்கொண்டிருந்ததை பார்த்தேன்.

2. அந்த நேரத்தில் தனித்து அதை மீண்டும் பார்த்த போது அதிகாலை சுமார் 5 மணியளவில் அந்த அறை எண்.106 பகுதியில் இருந்து ஒரு நபர் ஓடினார். அதை நான் போலீசார் சொன்ன பிறகு போலீசாரும் அதை கவனித்தார்கள்.அப்போது அந்த நபர் கையில் ஒரு பேக் வைத்திருந்தார். அந்த நபர் பற்றி போலீசார் ஹோட்டல் நிர்வாகத்திடம் விசாரித்த போது அந்த நபர் ஹோட்டலில் இருந்து கிளம்பி சென்றுவிட்டதாக கூறினார்கள்.மேற்படி பூட்டேஜ்சில் பார்த்த போது வேஸ்டி அணிந்திருந்தார் ஒள்ளியாகவும், சட்டை அணியாமல் இருந்தார், முகத்தை சரியாக பார்க்கவில்லை.அது போன்ற நபரை மீண்டும் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** எஸ் எஸ் கிராண்டுக்கு நான் தான் சிசிடிவி அமைத்து கொடுத்தேன். அந்த ஹோட்டலில் எத்தனை ஜிபிக்கு அமைத்து கொடுத்தேன் என்றால் 500 ஜீபிக்கு அமைத்தேன்.எத்தனை நாளைக்கு ஒருமுறை வந்து சர்வீஸ் செய்வேன் என்றால் இரண்டு நாளுக்கு ஒரு முறை. நாளைக்கு ஒரு முறை சர்வீஸ்க்காக சென்றிருந்தால் 02.30 மணி நேரம் முன்கூட்டியே ஓடும் நேரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரிதான்.

2. சிசிடிவி பூட்டேஜ் அமைப்பதற்கு தகவல் தொழில் நுட்ப சட்டப்படி மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெற்றிருக்கவேண்டும் என்றால் சரிதான் ஆனால் நான் அதை பெறவில்லை. சிசிடிவி பூட்டேஜ் பார்த்தேன் என்று சான்று எதுவும் நான் போலீசாரிடம் வழங்கவில்லை. சிசிடிவியில் பார்த்த உருவத்தை போலீசார் பின்னிட்டு எதுவும் அடையாளம் காண்பித்தார்களா என்றால் இல்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.